MAY 2025 **P/ID 35323/PTL3N**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு
50 சொற்களில் விடை எழுதுக.

1. வண்ணச் சினைச்சொல் என்றால் என்ன? சான்று தருக.

2. இயற்கைப் பொருளை கூறும் மரபு என்ன?

3. செப்பும் வினாவும் எங்ஙனம் அமைதல் வேண்டும்?

4. வேற்றுமை என்றால் என்ன? அதன் உருபுகளைக் குறிப்பிடுக.

5. ஏழாம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளுள் நான்கினை எழுதுக.

6. விளக்குக:- பிண்டப்பெயர்.

7. தடுமாறு தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

8. அச்சத்தைக் குறிக்கும் தொடரில் எந்த உருபுகள் மயங்கி வரும்?

9. விளியின் இலக்கணம் யாது?

10. உயிரீற்றில் விளியேற்பவை எவையெவை?

11. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' - விளக்குக.

12. குறிப்பு வரைக - இடைச்சொல், உரிச்சொல்.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு
250 சொற்களில் விடை எழுதுக.

13. திணை, பால், ஐயம் தோன்றும் போது கூறும் முறைகளாகக் கிளவியாக்கம் கூறுவனவற்றை விளக்குக.

14. இயற்பெயர் மற்றும் சுட்டுப்பெயர் தொடரில் எங்ஙனம் அமைதல் வேண்டும்?

15. ஐந்தாம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகள் என்னென்ன? விளக்குக.

16. முதலும் சினையும் உருபேற்கும் விதத்தினை எழுதுக.

17. விளியேலாப் பெயர்களைப் பட்டியலிடுக.

18. அஃறிணைப் பெயர்கள் குறித்து விளக்குக.

19. விளக்குக: இயற்பெயர் மற்றும் சினைப்பெயர்கள்.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு
500 சொற்களில் விடை எழுதுக.

20. திணை, பால், எண், இடம் குறித்த தொல்காப்பியச் சிந்தனைகளைப் பகர்க.

21. இரண்டாம் வேற்றுமை குறித்தெழுதுக.

22. ஆகுபெயரின் மரபுகளாக வேற்றுமை மயங்கியல் சுட்டுவனவற்றை விளக்கி உரைக்க.

23. மெய்யீற்றில் விளியேற்கும் பெயர்களை விவரிக்க.

24. உயர்திணைப் பெயர்கள் குறித்துக் கட்டுரைக்க.

———————